Registered as a Newspaper

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
19-4-1993
யாழ்ப்பாணம்

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 06 திங்கட்கிழமை (19-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 142

# தமிழீழம் எங்கும் இன்று பெரியளவில் அன்னைபூபதி அஞ்சலி நிகழ்ச்சிகள்

## மக்கள் எழுச்சியுடன் பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

தியாகச்சுடர் அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள், அவர் தமிழ் மண்ணுக்காகத் தன்னுயிர் ஈந்த நினைவு தினமான இன்று மிகப் பெரிய அளவில் தமிழீழப் பகுதிகள் எங்கும் விமரிசையாகவும், உணர்வு பூர்வமாகவும் நடைபெற உள்ளன.

கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் காலை முதல் மாலை வரை உண்ணாவிரதமும், அதன் பின்னர் அஞ்சலிக் கூட்டங்களும், அவற்றின் இறுதியில் சிறப்புக் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

கோட்ட மட்டத்தில் நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வுகளில் அவ்வப்பகுதி மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்வர். அஞ்சலிக் கூட்டங்களில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

வலிகாமம், தீவகம் கோட்டங்களுக்குரிய பிரதான அஞ்சலி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும்—

வடமராட்சிக் கோட்டத்துக்குரிய பிரதான அஞ்சலி நிகழ்வுகள் மாலிச் சந்தி பிள்ளையார் கோவிலிலும்—

தென்மராட்சிக் கோட்டத்துக்குரிய பிரதான அஞ்சலி நிகழ்வுகள் கொடிகாமம், நாவலடி அ. த. க. பாடசாலையிலும் நடைபெறும்.

பிரதான நிகழ்வுகள் நடைபெறும் இடங்களை விட ஏனைய இடங்களிலும் அஞ்சலி நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடாகி உள்ளது

(5 ஆம் பக்கம் பார்க்க)

ஊரடங்கு அறிவிக்கப்பட்டு

## வவுனியா, மன்னாரில் நேற்று 6 மணிநேர நடவடிக்கை

கொழும்பு, ஏப். 19

வவுனியா செட்டிகுளத்திலும் மன்னார்த் தீவிலும் நேற்று 6 மணித்தியால இராணுவ நடவடிக்கை இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் நேற்றுக் காலை 6 மணி முதல் ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதாக நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது.

மன்னார் ஊரடங்கு நண்பகல் 12 மணியுடன் நீக்கப்பட்டு விட்டதாக நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்ட வேளையில் செட்டிகுளத்துக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது படையினர் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும்—

மன்னார்த்தீவிலும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் கூட்டுப்படைகள் தலைமையகம் நேற்று மாலை அறிவித்தது. (ஒ-எ)

## ராஜீவ் காந்தி கொலை விசாரணைக்கு உடுகம்பொலவின் சத்தியக்கடதாசிகள்

### ஜெயின் ஆணைக்குழு கோருகிறது

கொழும்பு, ஏப். 19

முன்னாள் பிரதி பொலீஸ் மா அதிபர் உடுகம்பொலவின் சத்தியக் கடதாசிகளை, ராஜீவ் காந்தி கொலை பற்றி தற்போது விசாரணை நடத்தி வரும் இரண்டாவது ஆணைக் குழுவிது தலைவர் எம். சி. ஜெயின் கோரியுள்ளார்.

ஜே. வி. பி. நடவடிக்கைகளின் போது இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி உடுகம்பொலவின் சத்தியக் கடதாசிகளில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

அவை 'புரொண்ட் லைன்' சஞ்சிகையில் வெளியானதைத் தொடர்ந்தே, ஜெயின் ஆணைக்குழு அவற்றைக் கோரியுள்ளதாக "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது.

(உ-எ)

## பாக். அரசு கலைப்பு!

இஸ்லாமாபாத், ஏப். 19

நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் அரசும் நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டன.

இதற்கான உத்தரவை பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக் கான் நேற்றிரவு பிறப்பித்தார்.

மஸாரி என்பவர் தலைமையிலான காபந்து அரசு ஒன்றையும் ஜனாதிபதி நியமித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து, பாகிஸ்தான் அரசமைப்புச் சட்டப்படி 90 நாட்களுக்குள் பொதுத் தேர்தல்கள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது

ஜனாதிபதி குலாம் இஷாக் கானுக்கும் பதவியிழந்த பிரதமர் நவாஸ் ஷெரீபுக்கும் இடையில் நிலவி வந்த அரசியல் மோதல் நேற்று முன்தினம் பிரதமர் நவாஸ் ஷெரீப் தொலைக்காட்சி மூலம் மக்களுக்கு ஆற்றிய உரையின்போது பகிரங்கமாக வெடித்தது.

அந்த உரையில் ஜனாதிபதி குலாம் இஷாக் கானை, பிரதமர் ஷெரீப் கடுமையாகக் கண்டித்தார்.

இதனையடுத்து —

ஜனாதிபதி தமக்கு உள்ள அரசமைப்பு அதிகாரங்களைப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழர்கள் இன்று நடத்திவரும் போராட்டம் நியாயமானதே!

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 19

1931 டொனமூர் ஆணைக்குழுக் காலத்தில் இருந்து தமிழ் மக்களின் குறைகள் கவனிக்கப்படாது இருந்து வருகின்றன. ஆகவே தமிழர்களின் இன்றைய கிளர்ச்சி நியாயமானதே.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவர் டி. டபிள்யு. அபயக்கோன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஹாட்லி கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை, திரு. அபயக்கோனைக் கௌரவித்து கொழும்பில் அளித்த இரவு விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் சொன்னதாவது:-

தங்களின் நியாயமான பிரதி நிதித்துவம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக தமிழர்கள் உணர்கின்றனர். அதன் மூலம் தங்களின் ஜனநாயக ரீதியான உரிமைகளும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும், தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாகவும் தமிழர்கள் உணர்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை காண்பதில் அரசியல்வாதிகள் தரப்பில் காட்டப்பட்ட தாமதம், தமிழர்களின் இன்றைய கிளர்ச்சிக்கு வழிவகுத்தது.

தமிழரின் உரிமைகளை அங்கீகரித்து உரிய நேரத்தில் தீர்வு ஒன்றை அரசியல்வாதிகள் கண்டிருந்தால் நாடு இன்றைய நிலைக்கு வந்திருக்காது.

1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது பெரும் மோதலுக்கு வழி திறந்தது. அதன் பின்னர் 1958 இல் இடம்பெற்ற வகுப்புக் கலவரம் குரூரமான

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் சென்றுள்ள மங்கள அங்கு புலிகளுடன் பேசுவார்?

கொழும்பு, ஏப். 19

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா கடந்த வெள்ளிக்கிழமை லண்டன் பயணமானார்.

அங்கு விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களை அவர் சந்திக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது. (உ-எ)

# தலைவரைச் சந்திக்க தெரிவுக்குழு ஆர்வம்: யாழ். வர அனுமதி கேட்டு அவருக்குச் செய்தி

### இரகசிய வழிமூலம் அனுப்பப்பட்டதாம்

கொழும்பு, ஏப். 19

யாழ்ப்பாணத்துக்கு வந்து தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேச தெரிவுக்குழு ஆர்வமாக உள்ளது.

அதற்காக தெரிவுக் குழுவை யாழ்ப்பாணத்தில் வைத்துச் சந்திக்க ஒழுங்குகளை மேற்கொள்ளும்படி தலைவர் பிரபாகரனுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்ட எம். பியான கே. ஸ்ரீநிவாசன் இரகசிய வழி ஒன்றின் மூலம் கடந்த வார இறுதியில் இந்த வேண்டுகோள் தொடர்பான செய்தியை அனுப்பி வைத்திருக்கிறார்— என்று "சண்டே ரைம்ஸ்" நேற்றுச் செய்தி வெளியிட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை விடுதலைப் புலிகள் நேருக்குநேர் சந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## அஞ்சலிக்குரிய அன்னை பூபதி

ஈகைச்சுடரொளியாக ஒளிரும் அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு இன்று தமிழீழப் பிரதேசம் எங்கும் மிகப் பரந்த அளவில் மக்களால் உணர்வுபூர்வ மாகக் கொண்டாடப்படுகின்றன.

ஈழத் தமிழர்களது விடுதலைப் போராட்ட வரலாற்றில் அன்னை பூபதியின் தியாக வேள்வி மிக உயர்ந்த இடத்தை வகிப்பது. தமிழர்கள் வாழும் வரை என்றும் அவர்கள் மனங்களில் இருந்து மறையாதவாறு பதிந்திருக்க வல்லது.

ஈழத் தமிழர்களின் சுதந்திரப் போராடடம் மக்களின் மன உறுதியின் பால் எழுந்த தியாகத்தின் வடிவமானது உலக வாழ்வின் பற்றுக்கோடான விலைமதிப்பிடற்கரிய மகத்துவமான உயிரை ஈந்து தியாகம் செய்து நடைபெற்று வரும் உன்னதம் நிறைந்தது. சுதந்திரமான வாழ்வுக்கு முன்னால் உயிர் துச்சமானது என்ற அதி உயர்ந்த கோட்பாட்டுப் பரிமாணம் கொண்டது விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒவ்வொரு படிமமும் தியாகம் நிறைந்து பொலிவது

எனினும் தியாகி திலீபனதும், அன்னை பூபதியினதும் தாய் மண்ணுக்கான உயிர்க் கொடைகள் சிறப்பு மிக்கவை; தனித்துவமானவை.

தமிழர்கள் தங்களது உரிமைகளுக்காக மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பல்வேறு வடிவங்களில் அமைந்த அறவழிப் போராட்டங்களை, அமைதிப் போராட்டங்களை நடத்திச் சலிப்புற்ற நிலையில் நிர்ப்பந்தத்தின் பேரில் தான், தவிர்க்க இயலாத நிலையில் தான் ஆயுதப் போராட்ட வழியை நாடினார்கள்.

ஆயினும் அவர்கள் சாத்வீகத்தை, அமைதி வழியைத் துறந்துவிடவில்லை. ஆயுத கலாசாரத்தை பற்றிப் பிடித்திருக்க விரும்பவில்லை. இவற்றை உலகத்துக்கு உணர்த்திய பெருமை தியாகி திலீபனுக்கும், அன்னை பூபதித் தாய்க்குமே உண்டு அகிம்சை ஆயுதம் கொண்டு, கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் நடத்திய இந்தியாவே சாத்வீகத்துக்கு மதிப்பளிக்கத் தவறிவிட்டது என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தியவர்கள் அவர்கள்.

அன்னை பூபதி ஒரு சாதாரண தமிழ்க் குடும்பப் பெண். அரசியலில் பெரும் ஈடுபாடு காட்டியவர் அல்லர். ஆனால் அவரிடம் கிளர்ந்தெழுந்திருந்த சுதந்திர உணர்வும், அதனை அடைவதற்கான மனோவலிமையும் இந்திய இலங்கை அரசுகளும், உலகமும் எதிர் பார்த்திருக்க முடியாதவை.

ஒவ்வொரு தமிழ்த் தாயும், அவர்கள் பெற்ற ஒவ்வொரு புதல்வர், புதல்வியர்களும், தமது அடிமைவாழ்வை அகற்ற வேண்டும் என்ற உணர்வு படிந்துறைந்து திண்ணிய நெஞ்சினராகிவிட்டனர்; அவர்களை எந்த வல்லரசு வந்தாலும் வெல்ல முடியாது என்பதனை சர்வதேசங்களுக்கும் எடுத்துக் கூறியவர் அன்னை பூபதித் தாய் சுதந்திரத்துக்காக அகிம்சை வழியிலும் தங்களை ஆகுதி செய்வதற்கு தமிழ்ப் பெண்களும் பின் நிற்கமாட்டார்கள் என்று நிரூபித்துக் காட்டிய தலைமைத் தமிழ்த் தாய் அவர்.

உலக நாடுகளின் சுதந்திரப் போராட்ட வரலாற்றிலேயே உண்ணா நோன்பிருந்து தன் உயிர் ஈந்த முதலாவது தாயாக முத்திரை பதித்துவிட்டார் மனவளம் பொலியும் மட்டக்களப்புத் தந்த பூபதி அன்னை ஆகவே அவர் என்றென்றும் அஞ்சலிக்குரியவர். ஈழத் தமிழர் சுதந்திரப் போராட்டம் வெற்றி இலக்கை அடையும் வரை ஒவ்வொரு தமிழர்களாலும் மனம் விழைந்து பின்பற்றப்பட வேண்டியவர்!

# காலவெள்ளத்தால் அழியாத தனிச்சரித்திரம் அன்னை பூபதி

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு வழங்கிய நினைவாம்சம்.

## பெண்கள் எத்தகைய சூழ்நிலையிலும் போராடலாம் என்று எடுத்துக் காட்டியவர்

பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வடிவங்களில் முன்னேற்றம் கண்டுவரும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்ணினம் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளது. அறுபதுகளில் எழுந்த அகிம்சை வழிப் போராட்டத்தில் பெண்கள் அலையலையாக அணிதிரண்டனர். அதனை அடுத்து புலிகளின் தலைமையில் உருவகம் பெற்ற ஆயுதப் புரட்சிப் போராட்டத்திலும் பெண்கள் கணிசமான அளவு பங்களித்து வருகின்றனர். அனைத்து அடக்கு முறைக்கு எதிராகவும் அணிதிரண்டு போராடிக் கொண்டிருக்கும் பெண்ணினம் வியக்கத்தக்க வகையில் மகத்தான அர்ப்பணிப்புகளை செய்து வருகின்றது.

இந்த வகையில் இந்த மண்ணுக்காக தம்மை அர்ப்பணித்த தியாகிகளுள் அன்னைபூபதி காலவெள்ளத்தால் அழியாத ஒரு தனிச் சரித்திரம்.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் எமது மண்ணிற் காலடி எடுத்து வைத்து, மக்களை அழித்து எமது போராட்டத்தை நசுக்கிக் கொண்டிருந்த வேளை, அன்னை பூபதி தனது அறப்போரை ஆரம்பித்தார். அன்னை பூபதியின் இப்போராட்டம் ஒரு தனிப்பட்ட பெண் உள்ளத்தின கொதிப்பல்ல; ஒரு தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியின் வெளிப்பாடு.

### ஆதிக்கச் சுவடு பதிந்திருந்த வேளை

மிகவும் இக்கட்டான, நெருக்கடியான சூழ்நிலையில் எமது தாயகப் பூமியின் மூலை முடுக்கெல்லாம் அந்நிய இராணுவத்தின் ஆதிக்கச் சுவடுகள் பதிந்திருந்த வேளையில், சாதாரண மக்கள் எவரும் துணிந்து போராடத் தயங்கிய நேரத்தில் அன்னைபூபதி தனது அறப் போராட்டத்தினை நடத்தினார்.


தனது 58 ஆவது வயதில் அவர் மேற்கொண்ட இந்தத் தியாகப் போராட்டம், அவரது மனஉறுதியையும் தேசப் பற்றையுமே காட்டி நிற்கின்றது போராட்டத்தைக் குழப்புவதற்கு இந்திய ஆக்கிரமிப்புப்படை எத்தனையோ மிரட்டல்கள் அச்சுறுத்தல்களை மேற்கொண்ட போதும் அவற்றிற்கெல்லாம் பணிபாது அவர் தனது போராட்டத்தைத் தொடர்ந்தார். அவரது தியாகப் போராட்டம் பெண்ணினத்திற்கு எல்லாம் முன்னுதாரணமாக அமைந்தது.

### பெண்களை எழுச்சி பெறச் செய்தவர்

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக தமிழீழப் பெண்கள் எத்தனையோ அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகளுக்குள் சிக்குண்டு தவித்த வேளையில், அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தினால் பெண்ணினத்தை எழுச்சி பெறச் செய்தார்.

ஒரு சாதாரண குடும்பப் பெண், வயோதிபத்தாய் மேற்கொண்ட இப்போராட்டம், அனைத்துப் பெண்களும் எத்தகைய வாழ்க்கை சூழ்நிலையிலும் துணிந்து போராடலாம் என்று விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

குடும்ப உறவுகள் சுயநலப் பற்றுகள் என்பவற்றைத் துறந்து, எமது இனம், எமது தேசம், எமது மக்கள் என்ற பரந்த அடிப்படையிலான நோக்கத்திற்காக அவர் நடத்திய இந்தத் தியாகப் போராட்டம் அதியுன்னதமானது 32 நாட்கள் ஆகாரம் எதுவுமின்றி தன்னையே உருக்கி தாயகத்திற்கு ஈந்த இந்தத் தற்கொடை இதுவரை உலக வரலாற்றில் நிகழாத, ஓர் போராட்ட சம்பவமாகும். விடுதலை இலட்சியத்துக்காக சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து, உயிர்த்தியாகம் செய்த உலகத்தின் முதற் பெண்மணி என்ற பெருமையை அன்னைபூபதி எமது போராட்டத்திற்குத் தேடித் தந்தார்.



ஈழத் தமிழர்களின் நெஞ்சங்களில் நிரந்தர இடம்பிடித்துவிட்ட அன்னை பூபதி, தாயகத்தின் விடுதலைக்காகத் தன்னை ஆகுதியாக்கிய பின்னர் மலர்ப் படுக்கையில் ஆனந்தமாக மீளாத் துயில்கொள்ளும் காட்சி இது. சரியாக ஐந்து வருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படம். (அ)

### பெண்களின் எழுச்சிக் குரல்

போராட்டத்தின் எழுச்சிக் குரலாக பெண்குலத்தின் சக்தி வடிவமாக அன்னை பூபதி 19-04-1988 அன்று தனது 58 ஆவது வயதில் எமது தேசத்தின் அணையாத தீபமானார்

அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தில் தன்னைத் தற்கொடையாக்கி 5 வருடங்கள் மறைந்துவிட்ட போதும், அவரது தியாகம் என்றென்றும் எமது மக்கள் மனங்களில் அணையாத சுதந்திரச் சுடராக நிலைத்து விட்டது

எனவே இத்தகைய தற்கொடையாளி அன்னை பூபதியை நினைவு கூரும் இப் புனித நாளில் எமது விடுதலைப் போராட்டத்தில் தமக்குள்ள தேசியக் கடமையை உணர்ந்து அனைத்துத் தமிழீழப் பெண்களும் அணிதிரண்டு போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுக்க உறுதிபூண வேண்டும். ★

## தமிழீழம் எங்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஒரு மாத காலமாக குடாநாடு எங்கும் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சிகளுக்குச் சிகரம் வைத்தால் போல இன்றைய நிகழ்வுகள் இடம்பெறும்.

இன்றைய அஞ்சலி நிகழ்வுகளை முன்னிட்டு குடாநாட்டின் சகல கோட்டங்களிலும் அன்னை பூபதியின் திருவுருவப் படங்கள் சந்திகள், வீதிகள், வீடுகள் தோறும் வைத்து அலங்கரிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் வாழை, தோரணங்கள் கட்டி ஊரெல்லாம் எழில் கோலம் பூண்டுள்ளன. அன்னை பூபதியின் திரு உருவப் படங்களுக்கு மலரஞ்சலி செய்தும் தீபாஞ்சலி செய்தும் மக்கள் அன்னையை உணர்வு பூர்வமாக நினைவு கூர்ந்து வருகின்றனர்.

இன்றைய நிகழ்வுகளை ஒட்டி யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள வர்த்தக நிலையங்கள், சந்தைகள் யாவும் மூடப்பட்டிருக்கும்.

இன்றைய உண்ணாவிரத நிகழ்வுகளில் கலந்து கொள்ள கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தகர் சங்கங்கள் மற்றும் மாதர் சனசமூக அமைப்புகள் பாடசாலை மாணவர் மன்றங்கள் அனைத்தும் அங்கத்தினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

### இன்றைய கலை நிகழ்ச்சிகள்

இன்றைய சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் வருமாறு:-

யாழ். இந்துக் கல்லூரியில்—

தியாக தீபம் — நாட்டிய நாடகம்.

அன்னையிட்ட தீ — கவியரங்கு.

தியாகச்சுடர் — வில்லிசை.

இசை நிகழ்வு — விடியலைத் தேடும் பறவைகள்.

அல்வாய் மாலிசந்தி பிள்ளையார் கோவிலடியில் —

பூபதியின் புனிதப் போர்— நாட்டிய நாடகம்.

தியாகத் தாய் — வில்லிசை

கொடிகாமம் நாவலடி அ. த. க. பாடசாலையில்—

நாட்டிய நாடகம் — தியாகத் தாய்.

வில்லிசை — தியாக தீபம்.

### அச்சுவேலியில்

அச்சுவேலியில் அன்னை பூபதியின் நினைவாக முழு நாள் அடையாள உண்ணாவிரதம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் பல நூற்றுக்கணக்கானோர் உண்ணாவிரதம் இருந்தனர்.

உண்ணாவிரதத்தில் சிறுவர் முதல் முதியோர் வரை பலரும் கலந்து கொண்டனர். காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய உண்ணாவிரதம் மாலை 5-30 மணிக்கு முடிவடைந்தது

உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

(அ-51 11-118)

## பெண்ணினத்தின் பெருநிலவே!

காற்றில் எழுந்துவந்த
பதுப்பாட்டே! பூபதித் தாயே!
நேற்றோடு ஓர் மாதம் - உன்னை
நெஞ்சில் நிறுத்தி வைத்தோம்!

பெண்ணினத்தின் பெருநிலவே!
பெரும் புரட்சிக் கனல்கக்கும்
தண்ணொளியாம் சூரியனும்
உன்டணியைக் கண்டால் உருகாதோ?

கூட்டில் இருந்து வாழ்ந்த - தாயான
குருவியாய் நீயிருந்தும் ...
நாட்டைக்காக்க நிமிர்ந்தெழுந்து
நடந்த சிறப்பினை மறப்போமா?

தமிழீழ மண்பரப்பில் கால்பரப்ப
தாகமுடன் வந்தவரைத் தகர்த்தெறிந்து
வலிமையுடன் தியாகப்போர் புரிந்தவளே!
வற்றுமோ உன்நினைவு எமது நெஞ்சில்?

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகங்கள் மூலம் விவசாயிகளுக்கு ம.எண்ணெய்

அராலி, ஏப். 19

யாழ். குடாவில் நிலவும் கடும் வரட்சி காரணமாக அழியும் நிலையில் உள்ள பயன்தரு மரங்களை காப்பாற்றும் பொருட்டு சகல விவசாய உற்பத்தியாளர்களுக்கும் மண்எண்ணெய் வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இது தொடர்பாக மாவட்ட விவசாயக் குழுவுடனான கூட்டம் ஒன்று அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

சகல பயிர்களுக்கும் உடனடியாக நீரைப் பாய்ச்ச வேண்டிய அவசியம் பற்றி இக்கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிரதேச செயலகங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள பயிர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்களையும், தேவைப்படும் மண்எண்ணெயின் அளவையும் செயலகத்துக்குத் தெரியப்படுத்தி அதனைப் பெற்று விவசாயிகளுக்கு விநியோகிக்குமாறும் மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் பிரதேச செயலகங்களைப் பணித்துள்ளார். (த-12)

ஜேர்மனியில்:

## இலங்கை அகதிகள் வீட்டுக்கு பெட்ரோல் குண்டு வீச்சு

பெர்லின், ஏப். 19

ஜேர்மனியில் இலங்கை அகதிகள் ஐவர் தங்கியிருந்த வீடு மீது இனந்தெரியாதோர் பெட்ரோல் கைக்குண்டுகளை வீசித்தாக்குதல் நடத்தினார்கள் என்றும் — அச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் இத்தகவல் வெளியாகியுள்ளது. (த-எ)

யாழ். திறந்த பல்கலைக்கழகம்;

## பயிற்சிநெறிக்கு செலுத்திய பணம் மீளளிக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் பல்வேறு பயிற்சி நெறிகளுக்காக மக்கள் வங்கியில் பணம் செலுத்தியவர்கள் தாம் செலுத்திய பணத்தை தற்போது திருப்பிப்பெற்று வருகின்றனர்.

கொக்குவிலில் உள்ள யாழ். திறந்த பல்கலைக்கழகம் கடந்த சில ஆண்டுகளாக இயங்காமல் இருந்து வருகிறது.

இப் பல்கலைக்கழகத்தின் உதவிப் பணிப்பாளர் திரு. மு. தில்லைநாதன் இதனை இயங்க வைக்க மேற்கொண்ட முயற்சிகள் இதுவரை பயனளிக்காததை அடுத்தே, பயிற்சி நெறிகளுக்காக விண்ணப்பதாரர்கள் மக்கள் வங்கியில் கட்டிய பணத்தை மீளச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)

வலி.மேற்குப் பிரதேசத்தில்

## தொழில் பாதிப்புக்கான நிவாரணம் வழங்கப்படும்

வலி. மேற்கு பிரதேசசபைப் பகுதிக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் மற்றும் கட்டடத் தொழிலாளர்களுக்கான தொழில் பாதிப்பு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குத் தலா ஒரு கட்டம் என்ற அடிப்படையில் 3 கட்டங்களாக இந்த நிவாரணம் வழங்கப்படும்.

இதற்குத் தேவைப்படும் உணவுப் பொருள்களை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் வழங்கியுள்ளது. (த-12)

ஜி.சி.ஈ. பரீட்சை பெறுபேறுகள்:

## வட.-கிழக்கு மாகாணங்களில் ஆண்களே முன்னணியில்!

கொழும்பு, ஏப். 19

அண்மையில் வெளியிடப்பட்ட ஜி. சீ. ஈ. சாதாரணப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆண்கள் முன்னணியில் உள்ளனர் என்றும்— நாட்டின் ஏனைய பகுதிகளில் பெண்கள்தான் முன்னணியில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு தமிழ்த்தினசரி ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. (த எ)

## ஏற்றுமதி இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் நீக்கம்

கொழும்பு, ஏப். 19

வர்த்தகரீதியிலான பொருள்களுக்கான ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடுகள் கடந்த வியாழன் தொடக்கம் நீக்கப்பட்டுள்ளன.

இதன்படி—

இலங்கையில் உற்பத்தியாகும் எந்தப் பொருளையும் எந்த அளவிலும் சுங்க அதிகாரிகளுக்குப் பிரகடனம் செய்த பின்னர் தீர்வையைச் செலுத்தி நாட்டுக்கு வெளியே எடுத்துச் செல்ல முடியும்.

இதுபோலவே வெளிநாட்டில் இருந்து எந்த அளவுப் பொருள்களையும் கொண்டு வரலாம் அவற்றைச் சுங்க அதிகாரிகளுக்குப் பிரகடனப்படுத்தி வழமையான தீர்வையைச் செலுத்த வேண்டும்.

முன்னர் அனுமதிக்கப்பட்ட தொகைப் பொருள்களுக்கு மேலதிகமாகக் கொண்டு வரப்படும் பொருள்களுக்கென இதுவரை காலமும் அறவிடப்பட்டு வந்த அபராதம் இனிமேல் அறவிடப்படமாட்டாது; இனித் தீர்வை மட்டுமே அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பத்தாயிரம் டொலர்களைப் பிரகடனம் செய்யாமல் ஒருவர் கொண்டுவர முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1991 விஞ்ஞான சிறப்புப் பட்டப்பரீட்சை (இரசாயனம்), 1991 கலைத்துறைப் பொதுப் பரீட்சை பகுதி II, 1991 கலைத்துறை சிறப்புப் பரீட்சை பகுதி II, 1991 வர்த்தக நிர்வாகவியல் பரீட்சை பகுதி II, 1991 வர்த்தக மாணிப் பரீட்சை பகுதி II ஆகியவற்றின் முடிவுகள் அண்மையில் வெளிவந்துள்ளன.

விஞ்ஞான (இரசாயன) சிறப்புப்பரீட்சை இறுதி முடிவு வருமாறு.

முதலாம் வகுப்பு:
செல்வி ஜி யோகநாதன், ரி. சோதிரூபன், திருமதி வி. தம்பிராசா, வி சர்வேஸ்வரன்.

இரண்டாம் வகுப்பு:
(மேற்பிரிவு)
செல்வி கே. பொன்னம்பலம், செல்வி எம். விக்னேஸ்வரன், எஸ். கோணேசன், செல்வி கே நடராசா.

இரண்டாம் வகுப்பு:
(கீழ்ப் பிரிவு)
ஆர் பிரேம்ராஜ்

சித்தி:
செல்வி பி. கதிரவேலு, செல்வி ஆர். திருச்செல்வம், செல்வி எஸ். அம்பலவாணர்.

இரசாயனவியலுக்கான சேர். அருணாசலம் மகாதேவா நினைவுப்பரிசு திருமதி வி. தம்பிராசாவுக்கு வழங்கப்பட்டது. (க)

## முத்திரையிடல்

நாளை 20 ஆம் திகதியும், 22, 23, 29, 30 ஆகிய திகதிகளிலும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை கட்டைவேலி ப. நோ. கூ. சங்கத்திற்கருகில் வைத்து நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (த-162)

தொல்புரம்

## கமநல சேவை நிலையத்தில் போதியளவு உரவகைகள்

தொல்புரம் கமநலசேவை நிலைய உரக்களஞ்சியத்திற்கு தேவையான அமோனியம் சல்பேற்று உரம் அண்மையில் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டது.

உப உணவு உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் தமது தேவையை உறுதிப்படுத்தி உரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை — கமநல சேவை நிலையங்களில் தேவையான அளவு அடிக்கட்டு உரம் விற்பனைக்காக உள்ளது என்றும் அறிவிக்கப்படுகிறது. (த-12)

மாகாணசபை தேர்தல் முடியும் வரை

## ஆசிரியர் இடமாற்றங்களை இடைநிறுத்த உத்தரவு!

கொழும்பு, ஏப். 19

மாகாணசபைத் தேர்தல் முடிவடையும் வரை ஆசிரிய நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களை இடைநிறுத்தி வைக்கும்படி கல்விச் சேவைகள் ஆணைக்குழு, மாகாண கல்வி அமைச்சுகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

எனினும் — விசேட காரணங்களுக்காக வழங்கப்படும் நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களுக்காக கல்விச் சேவை ஆணைக்குழுவின் முன் அனுமதியைப் பெற வேண்டும் என்றும் மாகாணக் கல்வி அமைச்சுகள் பணிக்கப்பட்டுள்ளன. (த-எ)

## கடத்தல் சாரங்கள்

கொழும்பு, ஏப். 19

கடந்த சனியன்று கோஸ்கொடப் பொலீஸார் இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்தி வரப்பட்டதாகக் கூறப்படும் 4½ லட்சம் ரூபா பெறுமதியான சாரங்களை கைப்பற்றினார்கள். (த-எ)

## பழனி, ராணிப்பேட்டையில் காங். தனித்து போட்டியிடும்

சென்னை, ஏப். 19

பழனி நாடாளுமன்றத் தொகுதி, ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதி ஆகியவற்றுக்கான இடைத்தேர்தலில் காங்கிரஸ் தனித்தே போட்டியிடும்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி சென்னையில் நடந்த காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் பேசிய போது இதனைத் தெரிவித்தார்.

தமிழக மக்கள் முதலமைச்சர் மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு அவர் துரோகஞ் செய்துவிட்டார் என்று திரு. ஜி. கே மூப்பனார் தெரிவித்தார்.

இதேவேளை —

பழனி நாடாளுமன்றத் தொகுதியில் திரு குமாரசாமியும் - ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதியில் திரு. கே வி எஸ் மோகனனும் அ தி மு க வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர்.

இதனை அ தி மு க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

பழனி, ராணிப்பேட்டையில்

## காங். வேட்பாளர்கள் யார்? பிரதமர் ராவ் அறிவிப்பார்

சென்னை ஏப் 19

தமிழகத்தில் பழனி நாடாளுமன்றத் தொகுதி மற்றும் ராணிப்பேட்டை சட்டசபை தொகுதிகளில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் குறித்து பிரதமர் நரசிம்மராவ் விரைவில் அறிவிப்பார்.

வேட்பாளர்கள் நியமனம் குறித்து விவாதிப்பதற்கு பிரதமர் ராவ், தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி, தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோரை புதுடில்லிக்கு அழைத்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை புதுடில்லியில் இது குறித்து விரிவாக ஆராயப்படும் என்று நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் திரு வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார். (ஒ)

# வடக்கு-கிழக்கை பிரித்தால் இங்கு சமாதானம் ஏற்படும்

### தெரிவுக்குழுத் தலைவர் பி. பி. ஸிக்குப் பேட்டி

கிழக்கு மாகாணத்தை வடக்கிலிருந்து பிரித்து அங்கு புனரமைப்புப் பணிகளைச் செய்வதன்மூலம், இலங்கையின் பெரும் பகுதியில் சமாதானத்தை ஏற்படுத்தலாம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராயவென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் திரு மங்கள முனசிங்க பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு அளித்த தொலைபேசிப் பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தற்போது அவசரகாலச் சட்டத்தின் கீழ் இணைந்துள்ளபோதும் அதற்கு கிழக்கு மாகாண மக்களின் ஆணைபெறப்படவில்லை என்றும் எனவே அது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்றும் — தெரிவுக்குழுவில் கலந்துகொண்ட பெரும்பாலான சிங்கள, முஸ்லிம் உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எனவே கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்தி அங்கு வாழும் மக்கள் விருப்பினால் வடக்கு - கிழக்கு இணைப்பை ஏற்படுத்தலாம் என்றார்.

விடுதலைப்புலிகளுக்கும், தெரிவுக்குழுவுக்கும் இடையே பேச்சுக்கள் நடைபெறக்கூடிய சாத்தியக் கூறுகள் பற்றி அவரிடம் கேட்கப்பட்ட போது, தெரிவுக்குழுவே அது பற்றிய முடிவை எடுக்கும் என்றும் அவர் கூறினார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு டிரக்ரர் லோட் நல்ல கோழி எரு விற்பனைக்குண்டு. அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25298)

பர்மா தேக்கு சாப்பாட்டு மேசையும், ஆறு கதிரைகளும், தனி/ இரட்டை/ மெல்லிய மெத்தைகள், கதிரைகள், Pyrex Dishes, பீங்கான், கிளாஸ் வகைகள், கட்டில், மேசை, ஆட்டுக்கல், றங்குப் பெட்டி, எவர்சில்வர் தட்டங்கள், குசினி வீட்டுத்தளபாடங்கள், கம்பளங்கள்: இல. 22A, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டுக்குளி. (25300)

7 ஸ்ரீ 5696 வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: Bond Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (25283)

Olivetti English Typewriter (சிறிய ரகம்) புதிய தட்டச்சு இயந்திரங்கள் (ஆங்கிலம்) விற்பனைக்குண்டு. ஒரு வருட காலத்திற்கு உத்தரவாதமும் இலவச சேவையும் வழங்கப்படும். எமது விற்பனை நிலையத்தில் நேரில் பார்வையிடலாம் கலக்சி புகைப்பட சேவை, 337/1, 1ஆவது மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-4911)

## மூடப்படும்

மாகாணசபைத் தேர்தலை ஒட்டி எதிர்வரும் மே மாதம் 17, 18ஆம் திகதிகளில் சம்பந்தப்பட்ட மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் மூடப்படும். கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

மே 17ஆம் திகதி தென் பகுதியில் உள்ள ஏழு மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது [த-எ]

## பரீட்சார்த்திகள் மொத்தப்புள்ளி கிடையாது அவதி

1992 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகள் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பலருக்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தனிப்பட்ட டரீட்சார்த்திகள் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டபோது, சென்ற 12 ஆம் திகதி எடுத்து வரப்பட்ட மேற்படி புள்ளிகள் அனைத்தும் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டன என்று தெரிவிக்கப்பட்டதாம்.

இவர்களது மொத்தப்புள்ளி விவரங்கள் தவறுதலாக வேறு மாவட்டங்களுக்கு பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-162)

## ஜனசவிய செயல் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 19

ஜனசவிய செயல் திட்டம் குறித்த பிரதேச செயலர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று திங்கள் காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கிறது (த-3)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

சங்கானைப் பிரிவு

**ஆடைகள்**

பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் ஏற்ற ஆடைகள் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் சான்றிதழ் பெற்ற பெண்களால் தைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளுமிடம்:-


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (யாழ் கிளை),
வலி மேற்குப் பிரிவு, மாவடி,
வட்டுக்கோட்டை.

- கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி-5002)


## ஈராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 28 – 08 – 1969



தாயக மண்ணில்: 19 – 04 – 1991

**திருஞானசம்பந்தர் பரமேஸ்வரன்**
**2ஆம் லெப்டினன்ட் சிக்கோ (பாதர்)**
(யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)


திதி: 27-04-1993

சிரித்த முகத்துடன் சிங்காரக் கதை பேசிய நீ!
சிட்டாய்ப் பறந்து சென்று,
ஈராண்டு முடிந்தாலும் உன் நினைவுகளால்
நாள் தோறும் எம் இதயம் வேதனையால் துடிக்கிறது.
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா, சகோதரர், சகோதரி,
ஐயா, அம்மம்மா, அன்ரிமார், மாமா,
உறவினர், நண்பர்கள்.

61/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம் (25293)

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் மயில்வாகனம் ரங்கநாதன்**

மண் உலகில்: 21-12-1954
விண் உலகில்: 19-04-1992

திதி: 07-05-1993

எங்கள் அன்புச் செல்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து உருண்டோடியதே ஓராண்டு ஆனாலும் உங்கள் நினைவோ பல ஆண்டுகள். உங்கள் உயரிய பண்பால் உயிரையே துச்சமென மதித்தீர்கள்!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்கள்.

ஏ. வீ. றோட்,
அரியாலை. (25295)


# இனிப்பான செய்தி

## தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தியாகும்

தரமான

## பனை வெல்லத்தை

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற கீழ்வரும் நிலையங்களை நாடுங்கள்

**மொத்த விற்பனை நிலையங்கள்:**

★ சகல தெ. ப. பொ. சங்க தலைமையகங்கள்
★ சகல தெ. ப பொ. சங்க கொத்தணி - தலைமையகங்கள்
★ சங்கங்களின் சமாச சந்தைப்படுத்தும் பிரிவு
ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.

## மொத்த விற்பனை விலை கிலோ 38/-

★ சில்லறை விற்பனை நிலையங்கள்

**யாழ்ப்பாணம்**
பல்பொருள் விற்பனை நிலையம்
நாவலர் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
பாலசிங்கம் விடுதி உணவுச்சாலை
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
பல்பொருள் அங்காடி
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
சமாச சந்தைப்படுத்தல் பிரிவு
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**அரியாலை**
அரிகோப் பனம் பொருள் அங்காடி
மாம்பழம் சந்தி, அரியாலை.

**கோப்பாய்**
கூட்டுறவு அங்காடி
இருபாலைச் சந்தி. கோப்பாய்.

**சங்கானை**
வலி. கொத்தணி விற்பனை நிலையம்
அம்பாள் கடை. சங்கானை.
பனம் பொருள் விற்பனை நிலையம்
அராலி வீதி, சங்கானை.

**மானிப்பாய்**
மானி. கோப். விற்பனை நிலையம்
வைத்தியசாலை முன்பாக, மானிப்பாய்.

**கோண்டாவில்**
கற்பகத்தரு விற்பனை நிலையம்
தாவடிச்சந்தி, கோண்டாவில்.

**சுன்னாகம்**
கற்பகத்தரு விற்பனை நிலையம்
ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.

**சாவகச்சேரி**
பொற்பதி விற்பனை நிலையம்
இல. 2, பஸ் நிலையம, சாவகச்சேரி.

**கொடிகாமம்**
சேவை நிலையம்
கச்சாய் வீதி, கொடிகாமம்.

**பளை**
பனம் பொருள் விற்பனை நிலையம்
பஸ் நிலையம், பளை.

**அச்சுவேலி**
கற்பகம் விற்பனை நிலையம்
பிரதான வீதி, அச்சுவேலி.

**நெல்லியடி**
பனையகம்
கொடிகாம வீதி, நெல்லியடி.

**பருத்தித்துறை**
மொத்த விற்பனை நிலையம்
மந்திகை சந்தி. பருத்தித்துறை.

## சில்லறை விற்பனை விலை 40/-

இவ் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு வரவுள்ள

**புதிய உணவு**
## "திராட்சைப் பாகு"

✶ சுவைக்கத் தயாராகுங்கள்:

வடமராட்சி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
திக்கம் வடிசாலை, அல்வாய்.

விளம்பர அன்பளிப்பு:

அச்சுவேலி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம்.
கட்டைவேலி - உடுப்பிட்டி தெ. ப. பொ. கூ. சங்கம்.
பருத்தித்துறை - புலோலி தெ. ப. பொ. கூ. சங்கம்.
(இ-5008)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## அஞ்சலிக்குரிய அன்னை பூபதி

ஈகைச்சுடரொளியாக ஒளிரும் அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு இன்று தமிழீழப் பிரதேசம் எங்கும் மிகப் பரந்த அளவில் மக்களால் உணர்வுபூர்வ மாகக் கொண்டாடப்படுகின்றன.

ஈழத் தமிழர்களது விடுதலைப் போராட்ட வரலாற்றில் அன்னை பூபதியின் தியாக வேள்வி மிக உயர்ந்த இடத்தை வகிப்பது. தமிழர்கள் வாழும் வரை என்றும் அவர்கள் மனங்களில் இருந்து மறையாதவாறு பதிந்திருக்க வல்லது.

ஈழத் தமிழர்களின் சுதந்திரப் போராடட்டம் மக்களின் மன உறுதியின் பால் எழுந்த தியாகத்தின் வடிவமானது உலக வாழ்வின் பற்றுக்கோடான விலைமதிப்பிடற்கரிய மகத்துவமான உயிரை ஈந்து தியாகம் செய்து நடைபெற்று வரும் உன்னதம் நிறைந்தது. சுதந்திரமான வாழ்வுக்கு முன்னால் உயிர் துச்சமானது என்ற அதி உயர்ந்த கோட்பாட்டுப் பரிமாணம் கொண்டது விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒவ்வொரு படிமமும் தியாகம் நிறைந்து பொலிவது

எனினும் தியாகி திலீபனதும், அன்னை பூபதியினதும் தாய் மண்ணுக்கான உயிர்க் கொடைகள் சிறப்பு மிக்கவை; தனித்துவமானவை.

தமிழர்கள் தங்களது உரிமைகளுக்காக மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பல்வேறு வடிவங்களில் அமைந்த அறவழிப் போராட்டங்களை, அமைதிப் போராட்டங்களை நடத்திச் சலிப்புற்ற நிலையில் நிர்ப்பந்தத்தின் பேரில் தான், தவிர்க்க இயலாத நிலையில் தான் ஆயுதப் போராட்ட வழியை நாடினார்கள்.

ஆயினும் அவர்கள் சாத்வீகத்தை, அமைதி வழியைத் துறந்துவிடவில்லை. ஆயுத கலாசாரத்தை பற்றிப் பிடித்திருக்க விரும்பவில்லை. இவற்றை உலகத்துக்கு உணர்த்திய பெருமை தியாகி திலீபனுக்கும், அன்னை பூபதித் தாய்க்குமே உண்டு அகிம்சை ஆயுதம் கொண்டு, கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் நடத்திய இந்தியாவே சாத்வீகத்துக்கு மதிப்பளிக்கத் தவறிவிட்டது என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தியவர்கள் அவர்கள்.

அன்னை பூபதி ஒரு சாதாரண தமிழ்க் குடும்பப் பெண். அரசியலில் பெரும் ஈடுபாடு காட்டியவர் அல்லர். ஆனால் அவரிடம் கிளர்ந்தெழுந்திருந்த சுதந்திர உணர்வும், அதனை அடைவதற்கான மனோவலிமையும் இந்திய இலங்கை அரசுகளும், உலகமும் எதிர்பார்த்திருக்க முடியாதவை.

ஒவ்வொரு தமிழ்த் தாயும், அவர்கள் பெற்ற ஒவ்வொரு புதல்வர், புதல்வியர்களும், தமது அடிமைவாழ்வை அகற்ற வேண்டும் என்ற உணர்வு படிந்துறைந்து திண்ணிய நெஞ்சினராகிவிட்டனர்; அவர்களை எந்த வல்லரசு வந்தாலும் வெல்ல முடியாது என்பதனை சர்வ தேசங்களுக்கும் எடுத்துக் கூறியவர் அன்னை பூபதித் தாய் சுதந்திரத்துக்காக அகிம்சை வழியிலும் தங்களை ஆகுதி செய்வதற்கு தமிழ்ப் பெண்களும் பின் நிற்கமாட்டார்கள் என்று நிரூபித்துக் காட்டிய தலைமைத் தமிழ்த் தாய் அவர்.

உலக நாடுகளின் சுதந்திரப் போராட்ட வரலாற்றிலேயே உண்ணா நோன்பிருந்து தன் உயிர் ஈந்த முதலாவது தாயாக முத்திரை பதித்துவிட்டார் மனவளம் பொலியும் மட்டக்களப்புத் தந்த பூபதி அன்னை ஆகவே அவர் என்றென்றும் அஞ்சலிக்குரியவர். ஈழத் தமிழர் சுதந்திரப் போராட்டம் வெற்றி இலக்கை அடையும் வரை ஒவ்வொரு தமிழர்களாலும் மனம் விழைந்து பின்பற்றப்பட வேண்டியவர்!

# காலவெள்ளத்தால் அழியாத தனிச்சரித்திரம் அன்னை பூபதி

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு வழங்கிய நினைவாம்சம்.

## பெண்கள் எத்தகைய சூழ்நிலையிலும் போராடலாம் என்று எடுத்துக் காட்டியவர்

பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வடிவங்களில் முன்னேற்றம் கண்டுவரும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்ணினம் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளது. அறுபதுகளில் எழுந்த அகிம்சை வழிப் போராட்டத்தில் பெண்கள் அலையலையாக அணி திரண்டனர். அதனை அடுத்து புலிகளின் தலைமையில் உருவம் பெற்ற ஆயுதப் புரட்சிப் போராட்டத்திலும் பெண்கள் கணிசமான அளவு பங்களித்து வருகின்றனர். அனைத்து அடக்கு முறைக்கு எதிராகவும் அணிதிரண்டு போராடிக் கொண்டிருக்கும் பெண்ணினம் வியக்கத்தக்க வகையில் மகத்தான அர்ப்பணிப்புகளை செய்து வருகின்றது.

இந்த வகையில் இந்த மண்ணுக்காக தம்மை அர்ப்பணித்த தியாகிகளுள் அன்னைபூபதி காலவெள்ளத்தால் அழியாத ஒரு தனிச் சரித்திரம்.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் எமது மண்ணிற் காலடி எடுத்து வைத்து, மக்களை அழித்து எமது போராட்டத்தை நசுக்கிக் கொண்டிருந்த வேளை, அன்னை பூபதி தனது அறப்போரை ஆரம்பித்தார். அன்னை பூபதியின் இப்போராட்டம் ஒரு தனிப்பட்ட பெண் உள்ளத்தின கொதிப்பல்ல; ஒரு தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியின் வெளிப்பாடு.

### ஆதிக்கச் சுவடு பதிந்திருந்த வேளை

மிகவும் இக்கட்டான, நெருக்கடியான சூழ்நிலையில் எமது தாயகப் பூமியின் மூலை முடுக்கெல்லாம் அந்நிய இராணுவத்தின் ஆதிக்கச் சுவடுகள் பதிந்திருந்த வேளையில், சாதாரண மக்கள் எவரும் துணிந்து போராடத் தயங்கிய நேரத்தில் அன்னைபூபதி தனது அறப் போராட்டத்தினை நடத்தினார்.

தனது 58ஆவது வயதில் அவர் மேற்கொண்ட இந்தத் தியாகப் போராட்டம், அவரது மனஉறுதியையும் தேசப் பற்றையுமே காட்டி நிற்கின்றது போராட்டத்தைக் குழப்புவதற்கு இந்திய ஆக்கிரமிப்புப்படை எத்தனையோ மிரட்டல்கள் அச்சுறுத்தல்களை மேற்கொண்ட போதும் அவற்றிற்கெல்லாம் பணியாது அவர் தனது போராட்டத்தைத் தொடர்ந்தார். அவரது தியாகப் போராட்டம் பெண்ணினத்திற்கு எல்லாம் முன்னுதாரணமாக அமைந்தது.

### பெண்களை எழுச்சி பெறச் செய்தவர்

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக தமிழீழப் பெண்கள் எத்தனையோ அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகளுக்குள் சிக்குண்டு தவித்த வேளையில், அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தினால் பெண்ணினத்தை எழுச்சி பெறச் செய்தார்

ஒரு சாதாரண குடும்பப் பெண், வயோதிபத்தாய் மேற்கொண்ட இப்போராட்டம், அனைத்துப் பெண்களும் எத்தகைய வாழ்க்கை சூழ்நிலையிலும் துணிந்து போராடலாம் என்று விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.


குடும்ப உறவுகள் சுயநலப் பற்றுகள் என்பவற்றைத் துறந்து, எமது இனம், எமது தேசம், எமது மக்கள் என்ற பரந்த அடிப்படையிலான நோக்கத்திற்காக அவர் நடத்திய இந்தத் தியாகப் போராட்டம் அதியுன்னதமானது 32 நாட்கள் ஆகாரம் எதுவுமின்றி தன்னையே உருக்கி தாயகத்திற்கு ஈந்த இந்தத் தற்கொடை இதுவரை உலக வரலாற்றில் நிகழாத, ஓர் போராட்ட சம்பவமாகும். விடுதலை இலட்சியத்துக்காக சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து, உயிர்த்தியாகம் செய்த உலகத்தின் முதற் பெண்மணி என்ற பெருமையை அன்னைபூபதி எமது போராட்டத்திற்குத் தேடித் தந்தார்.

### பெண்களின் எழுச்சிக் குரல்

போராட்டத்தின் எழுச்சிக் குரலாக பெண்குலத்தின் சக்திவடிவமாக அன்னை பூபதி 19-04-1988 அன்று தனது 58 ஆவது வயதில் எமது தேசத்தின் அணையாத தீபமானார்

அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தில் தன்னைத் தற்கொடையாக்கி 5 வருடங்கள் மறைந்துவிட்ட போதும், அவரது தியாகம் என்றென்றும் எமது மக்கள் மனங்களில் அணையாத சுதந்திரச் சுடராக நிலைத்துவிட்டது

எனவே இத்தகைய தற்கொடையாளி அன்னை பூபதியை நினைவு கூரும் இப்புனித நாளில் எமது விடுதலைப் போராட்டத்தில் தமக்குள்ள தேசியக் கடமையை உணர்ந்து அனைத்துத் தமிழீழப் பெண்களும் அணிதிரண்டு போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுக்க உறுதிபூண வேண்டும். ★



ஈழத் தமிழர்களின் நெஞ்சங்களில் நிரந்தர இடம்பிடித்துவிட்ட அன்னை பூபதி, தாயகத்தின் விடுதலைக்காகத் தன்னை ஆகுதியாக்கிய பின்னர் மலர்ப் படுக்கையில் ஆனந்தமாக மீளாத் துயில்கொள்ளும் காட்சி இது. சரியாக ஐந்து வருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படம். (அ)

## தமிழீழம் எங்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஒரு மாத காலமாக குடாநாடு எங்கும் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சிகளுக்குச் சிகரம் வைத்தால் போல இன்றைய நிகழ்வுகள் இடம்பெறும்.

இன்றைய அஞ்சலி நிகழ்வுகளை முன்னிட்டு குடாநாட்டின் சகல கோட்டங்களிலும் அன்னை பூபதியின் திருவுருவப் படங்கள் சந்திகள், வீதிகள், வீடுகள் தோறும் வைத்து அலங்கரிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் வாழை, தோரணங்கள் கட்டி ஊரெல்லாம் எழில் கோலம் பூண்டுள்ளன. அன்னை பூபதியின் திரு உருவப் படங்களுக்கு மலரஞ்சலி செய்தும் தீபாஞ்சலி செய்தும் மக்கள் அன்னையை உணர்வு பூர்வமாக நினைவு கூர்ந்து வருகின்றனர்.

இன்றைய நிகழ்வுகளை ஒட்டி யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள வர்த்தக நிலையங்கள், சந்தைகள் யாவும் மூடப்பட்டிருக்கும்.

இன்றைய உண்ணாவிரத நிகழ்வுகளில் கலந்து கொள்ள கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தகர் சங்கங்கள் மற்றும் மாதர் சனசமூக அமைப்புகள் பாடசாலை மாணவ[illegible] கள் அனைத்தும் அங்கத்தினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

### இன்றைய கலை நிகழ்ச்சிகள்

இன்றைய சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் வருமாறு!-

யாழ். இந்துக் கல்லூரியில்—

தியாக தீபம் — நாட்டிய நாடகம்.

அன்னையிட்ட தீ — கவியரங்கு.

தியாகச்சுடர் — வில்லிசை.

இசை நிகழ்வு — விடியலைத் தேடும் பறவைகள்.

அல்வாய் மாலிசந்தி பிள்ளையார் கோவிலடியில் —

பூபதியின் புனிதப் போர்— நாட்டிய நாடகம்.

தியாகத் தாய் — வில்லிசை

கொடிகாமம் நாவலடி அ. த. க. பாடசாலையில்—

நாட்டிய நாடகம் — தியாகத் தாய்.

வில்லிசை — தியாக தீபம்.

### அச்சுவேலியில்

அச்சுவேலியில் அன்னை பூபதியின் நினைவாக முழு நாள் அடையாள உண்ணாவிரதம் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

அச்சுவேலி பஸ் நிலையத் [illegible] அருகில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் பல நூற்றுக்கணக்கானோர் உண்ணாவிரதம் இருந்தனர்.

உண்ணாவிரதத்தில் சிறுவர் முதல் முதியோர் வரை பலரும் கலந்து கொண்டனர். காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய உண்ணாவிரதம் மாலை 5-30 மணிக்கு முடிவடைந்தது

உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

(அ-51-11-118)

## பெண்ணினத்தின் பெருநிலவே!

காற்றில் எழுந்துவந்த
புதுப்பாட்டே! பூபதித் தாயே!
நேற்றோடு ஓர் மாதம் - உன்னை
நெஞ்சில் நிறுத்தி வைத்தோம்!

பெண்ணினத்தின் பெருநிலவே!
பெரும் புரட்சிக் கனல்கக்கும்
தண்ணொளியாம் சூரியனும்
உன்டணியைக் கண்டால் உருகாதோ?

கூட்டில் இருந்து வாழ்ந்த - தாயான
குருவியாய் நீயிருந்தும் ...
நாட்டைக்காக்க நிமிர்ந்தெழுந்து
நடந்த சிறப்பினை மறப்போமா?

தமிழீழ மண்பரப்பில் கால்பரப்ப
தாகமுடன் வந்தவரைத் தகர்த்தெறிந்து
வலிமையுடன் தியாகப்போர் புரிந்தவளே!
வற்றுமோ உன்நினைவு எமது நெஞ்சில்?

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.ஐ.தே. முன்னணிக்கு செல்வாக்கு அதிகரிப்பு

# லலித்தின் கட்சிக்கு எதிராக ஐ.தே. கவினர் அராஜகம்!

## பொலீஸ் அதிகாரிகளும் உடந்தையாம்

கொழும்பு, ஏப். 19

தென்பகுதியில் லலித் — காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு செல்வாக்கு அதிகரித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாகாணசபைத் தேர்தல்கள் சமயத்தில் தென்பகுதியில் — குறிப்பாக கொழும்பு மாவட்டம் அடங்கிய மேல் மாகாணத்தில் — லலித் கட்சிக்கு செல்வாக்கு அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஆத்திரமுற்றுள்ள ஐ.தே.கவினர் லலித்—காமினி ஆதரவாளர்கள் மீது அராஜகங்களை கட்டவிழ்த்து வருகின்றனர் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஐ. தே. கவினரின் அராஜக நடவடிக்கைகளுக்கு பொலீஸ் அதிகாரிகள் சிலரும் உடந்தையாக உள்ளனர் என்று 'லக்திவ' கிளை ஆசிரியர் வினிஹெற்றிகொட பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

அரசின் அராஜக நடவடிக்கைகள் பொதுவாக 'எதிர்க்கட்சிகளுக்கு எதிராக இருப்பினும், லலித் கட்சியினர் மீதே அதிகளவில் குறி வைக்கப்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களின்போது அரசுக்கு கிடைக்கக்கூடிய வாக்குகளைப் பிரிக்கும் சக்தி வாய்ந்த கட்சியாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியே விளங்குகிறது என்றும்—

இதனால் தான் ஐ. தே க வினர் அந்த முன்னணியைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக பல்வேறு வகையிலும் அராஜகங்களைப் புரிந்து வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

ஜ. ஐ தே. முன்னணியைச் சேர்ந்த ஏராளமானவர்கள் பல இடங்களிலும் தாக்கப்பட்டுவருகின்றனர் என்பதற்கு சாட்சியாக தென்பகுதி பொலீஸ் நிலையங்களில் நாளாந்தம் முறைப்பாடுகள் குவிந்தவண்ணம் உள்ளதாக கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-3-6)

## 'குமண' வந்து திரும்பியது

யாழ்ப்பாணம், ஏப். 19

திருகோணமலையில் இருந்து நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'குமண' கப்பல் நேற்று மாலையே கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

கப்பலில் எஞ்சியிருந்த ஒரு தொகுதி உணவுப் பொருள்கள் நேற்று பருத்தித்துறையில் இறக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றிருந்த அரச ஊழியர்களையும் —

விடுமுறைக்காகக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் அரச ஊழியர்களையும் ''குமண'' கப்பல் திருமலையிலிருந்து ஏற்றி வந்தது. (உ-3)

## ஆதரவாளர் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஏப். 19

மட்டக்களப்பு மாவட்டம் பண்டாரியவெளி என்ற இடத்தில் கொக்கட்டிச்சோலை இராணுவத்தினரும், ரெலோ தேசவிரோதிகளும் சுட முயன்ற சமயம், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் மாமாங்கத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் மனோகரன் (23 வயது) என்ற புலிகளின் முழு நேர ஆதரவாளரே வீரச்சாவு அடைந்தவர் ஆவார். (ஒ)

## தலைவரின் சிறப்புப் பரிசு கோகுலனுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 19

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பால் அன்னை பூபதி நினைவாக நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் தென்மராட்சிக் கோட்ட மட்டத்தில் 7 ஆம் ஆண்டில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ள மாணவன் செல்வன் வி கோகுலன், தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசைப் பெறவுள்ளார்.

சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் நாலாம் ஆண்டில் பயிலும் செல்வன் கோகுலன், ஏழாம் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றி முதல் இடத்தைப் பிடித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 19

மட்டக்களப்பு மயிலவெட்டுவான் பகுதியை கடந்த வெள்ளிக்கிழமை சுற்றி வளைத்த இராணுவத்தினர், அங்கு தமிழர்கள் பலரை கைது செய்தனர்.

விசாரணைகளின் பின்னர் மூவரை படையினர் முகாமுக்குக் கூட்டிச் சென்றனர். (ஒ)

### தமிழர்கள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடக்குமுறைக் காலத்தைத் தோற்றுவித்தது. அந்தக் காயங்கள் தமிழரின் சுயமரியாதையைப் பாதித்தன.

கிளர்ச்சிக்கான காரணிகளை நீக்கும் வரை இராணுவ ரீதியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது; இராணுவ ரீதியான வெற்றியும் நீடித்து நிற்காது.

சிறுபான்மையினர் மீது பெரும்பான்மைச் சமூகம் தமது எண்ணத்தை திணிக்கும் முயற்சி பாதக விளைவையே தரும்.

நாட்டில் மீண்டும் தெளிவான புத்தி நிலவும் என்று நம்புகின்றேன்.

அதன் மூலம் வடபகுதியில் ஹாட்லி போன்ற கல்வி நிறுவனங்களில் சிங்கள மாணவர்கள் கல்வி பயிலும் சந்தர்ப்பம் மீண்டும் ஏற்படும் என்று நான் நம்புகின்றேன்.

அப்பாவி மக்களை வறுமைக்குத் தள்ளும் பயனற்ற ஒரு நடவடிக்கையில் தேசியச் சொத்தை விரயமாக்கக் கூடாது—என்றார் அவர்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா பேசுகையில்—

''நியாயமான தீர்வு காணப்பட்டு, யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிடில் பரஸ்பரம் சந்தேகம் கொண்ட தலைமுறை ஒன்றை உருவாக்கிய குற்றத்துக்கு இலங்கை ஆளாக நேரிடும்.

''உடனடி லாபங்களுக்காக இனமோதல்களை அரசியல்வாதிகள் உருவாக்கினார்கள். ஆனால் அவை நாட்டை நீண்ட கால அழிவுக்கு உள்ளாக்கி விட்டன.

''கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு பயன்படுத்த வேண்டிய மதிப்புமிகு வளங்கள் பயனற்ற யுத்தம் ஒன்றுக்காக விரயமாக்சப்படுகின்றன'' என்று சொன்னார். (உ-எ)

## ஜெயலலிதா புறக்கணிப்பு

சென்னை, ஏப். 19

பத்திரிகைகளின் கருத்துக் கணிப்புகளுக்கு நான் மதிப்புக் கொடுப்பதில்லை. பத்திரிகைகளில் வெளியாகும் கருத்துக் கணிப்பு மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிப்பவையும் அல்ல.

அடுத்த மாதம் இடைத் தேர்தல் நடைபெறவிருக்கும் ராணிப்பேட்டையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இவ்வாறு கூறியுள்ளார். (ஒ)

### தலைவரைச்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தித்துப் பேச்சுகள் நடத்தினால் அன்றி, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமுடியாது என்று திரு. ஸ்ரீநிவாசன், தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிய தனது வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்குத் தாம் அனுப்பிய அவசர வேண்டுகோளுக்கு அரசின் ஆசியும் தெரிவுக்குழுவின் ஆதரவும் இருப்பதாக திரு. ஸ்ரீநிவாசன் கூறுகிறார்.

அவரது வேண்டுகோளில் கூறப்பட்டிருப்பதாவது:-

எமக்கு வெளி மத்தியஸ்தர்கள் தேவையில்லை. தமிழ் மக்களின் உள்ளுணர்வுகளை அறிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு நாம் போராடியுள்ளோம்.

தமிழ்மக்களின் பலத்தையும் உறுதியையும் நாம் உலகுக்குக் காட்டியுள்ளோம்.

ஆனால் இன்று பரஸ்பர புரிந்துணர்வுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் பிணக்கைத் தீர்த்துக்கொள்ளும் நேரம் வந்துவிட்டது.

இந்த முயற்சி தோல்வியுறுமானால் கசப்புணர்வும் யுத்தத்தின் குரூரமும் தமிழர்களை ஆழமான நெருக்கடிக்குள் தள்ளிவிடும்

— இவ்வாறு திரு. ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (உ-எ-3)

### பாக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாவித்து பிரதமர் ஷெரீபின் அரசைக் கலைத்தார்.

ஷெரீபின் அரசாங்கம் அரசமைப்புச் சட்டப்படி இயங்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியாவதற்கு முன்னர் நேற்று, பாகிஸ்தான் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களுக்கு முன்னால் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

1990 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோவின் அரசும் இதே போன்று ஜனாதிபதியால் கலைக்கப்பட்டது தெரிந்ததே.

இப்போது முஸ்லீம் லீக் கட்சி தலைமையிலான அரசு கலைக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இவ்வாறு மூன்று அரசுகள் கலைக்கப்பட்டிருப்பதாக இந்திய வானொலி அறிவித்தது.

களுத்துறைச் சிறையில் உள்ள

## 450 தமிழ்க்கைதிகள் தம்மை விடுவிக்க கோருகின்றனர்

களுத்துறை புதிய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 450 தமிழ்க் கைதிகள் தம்மீது வழக்குத் தாக்கல் செய்யும் படியும் அல்லது தம்மை விடுதலை செய்யும் படியும் அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

பொரளை மகஸீன் சிறை மற்றும் களுத்துறை புதிய சிறை ஆகியவற்றில் சுமார் 700 தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

ஜூன் 4 முதல் 6 வரை

## கலை, இலக்கிய கண்காட்சி; யாழ். நகரில் நடக்கும்

### உள்ளூராட்சியினர் ஏற்பாடு

யாழ். இந்துக் கல்லூரியில் எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை — 3 தினங்களுக்கு பெரியளவில் கலை, இலக்கிய கண்காட்சி ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

யாழ், உள்ளூராட்சித் திணைக்களம், பல்வேறு நிறுவனங்களின் உதவியுடன் இந்தக் கண்காட்சியை சிறப்பாக நடத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நேற்று உள்ளூராட்சித் திணைக்களத்தில் உதவி ஆணையாளர் திரு சு. டிவகலாலா தலைமையில் நடைபெற்றது.

ஈழத்தில் வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், கலை ஆக்கங்களான சிற்பங்கள், ஓவியங்கள், புகைப் படங்கள் மற்றும் ஆயுள்வேத மூலிகைகள் அடங்கியதாக கண்காட்சி மிளிரும். அத்துடன் பழைய ஏட்டுச் சுவடிகளும் கண்காட்சியில் இடம்பெறும்.

கண்காட்சிக்குத் தேவையான தமிழர்களின் கலை வரலாற்றுப் பாரம்பரியங்களை எடுத்துக்காட்டும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சாதனங்கள், இற்றை வரையான நிகழ்வுகளை உள்ளடக்கிய பல்வேறு சான்றுகளை சேகரிக்க முடிவாகியுள்ளது.

கண்காட்சிக்குத் தேவையான சான்றுகள், ஆதாரங்கள், சாதனங்கள் போன்றவற்றை பொது மக்களிடம் இருந்து பெற்றுக்கொள்வதென நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஓ-111)

## யாழ். மருந்துவ பீடத்துக்கு ரூ. 30 லட்சத்துக்கு கருவிகள்

### சுவீடன் பல்கலை. வழங்கியது

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். மருத்துவ பீடத்துக்கு 30 லட்சம் ரூபா பெறுமதியான நவீன உபகரணங்களை சுவீடன் உப்சால் பல்கலைக் கழகம் வழங்கியுள்ளது.

கொழும்பு வந்து சேர்ந்துள்ள இந்த உபகரணங்களை கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும்—

அதற்கான அனுமதியை கூட்டுப்படைகள் தலைமையகம் வழங்கியுள்ளதாகவும்— மருத்துவபீட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்குப் பயிற்சி

பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் உள-உடல் நலன் சார் பிரச்சினைகளை அணுகுவது எப்படி என்பதை மையமாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான இருநாள் பயிற்சி 20ஆம், 21ஆம் திகதிகளில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

''யுனிசெவ்'' உதவியுடன் யாழ். மாநகராட்சி மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்பயிற்சியில் யாழ். மாநகரப் பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள் கலந்து கொள்வார்கள்.

20 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு மாநகர ஆணையாளர் தலைமையில் நடைபெறவிருக்கும் ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், சிறப்பு விருந்தினராக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளரும் கலந்து கொள்வார்கள். (க)

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமன நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம். ஏப். 19

பட்டதாரி பயிலுநர் பரீட்சைக்குத் தோற்றி புள்ளிகள் பெற்றும், கொட்டகலையில் நடைபெற்ற சேவை முன் பயிற்சிக்குச் செல்ல முடியாதவர்களுக்கும், பட்டதாரிப் பயிலுநர் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்களுக்குமான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

இதேவேளை — மேற்படி பரீட்சைக்குத் தோற்றி அப்பரீட்சை முடிவுகளைப் பெறாதவர்களுக்கு மறுநாள் வியாழக்கிழமை காலை 9மணிக்கு நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

யாழ். கல்வித் திணைக்களத்தில் முன்கூட்டியே தமது பெயர்களைப் பதிவு செய்த பட்டதாரிகள் தமது பிறப்புச் சான்றிதழ், பட்டதாரிச் சான்றிதழ், ஆகியவற்றுடன் —

பரீட்சைக்கு விண்ணப்பித்தும் அதற்குத் தோற்ற முடியாமற் போனவர்கள் தாங்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்ததை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடன் குறித்த நாட்களில் சமுகமளிக்குமாறு யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

ஏற்கனவே நியமனம்பெற்று வெளிமாவட்டங்களுக்கு அமர்த்தப்பட்டவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கத் தேவையில்லை என்றும் அவர் அறிவித்துள்ளார். (த)

மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 298 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org